பத்திரிக்கைச்செய்தி

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் பணிபுரிவதாக மிரட்டி லஞ்சம் கேட்டு பெற்ற தனிநபருக்கு 3 வருடங்கள் கடுங்காவல் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் ரவீந்திரன், இளநிலை வரைவு அதிகாரி, பொதுப்பணித்துறை, வேலூரில் பணிபுரிந்து வருகிறார். புகார்தாராரிடம் திரு.ராதாகிருஷ்ணன், தனிநபர், திரு.மோகன்ராஜ், பதிவறை உதவியாளர், பொதுப்பணித்துறை, வேலூர், மற்றும் கண்ணியப்பன், தனிநபர் ஆகியோர் புகார்தாரர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பிரிவில் இருந்து மனு வந்துள்ளதாக கூறியுள்ளனர். திரு.ராதாகிருஷ்ணன், தனிநபர் தான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் பணிபுரிவதாகவும் புகார்தாராரிடம் தெரிவித்துள்ளார். மேலும் புகார்தாராரிடம் தங்கள் மீதான மனு மீது மேல்நடவடிக்கை எடுக்காமலிருக்க திரு.கண்ணியப்பன், தங்களுக்கு லஞ்சபணம் தரவேண்டும் என கூறி அந்த பணத்தை தன்னுடைய வங்கி கணக்கில் செலுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார். இதன்படி புகார்தாரர் திரு.கண்ணியப்பன் அவர்களின் வங்கி கணக்கில் கடந்த ஆகஸ்டு 2011 முதல் ஜனவரி 2012 ஆண்டு வரை ரூ.7,60,000/- வரவு வைத்துள்ளார். புகார்தாரர் இந்த மோசடி பற்றி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னையில் புகார் மனு சமர்ப்பித்துள்ளார். புகார்மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி ராதாகிருஷ்ணன், மோகன்ராஜ், மற்றும் திரு.கண்ணியப்பன் ஆகியோர் மீது வழக்கு சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கு நடைபெற்றுவந்த நிலையில் திரு.ராதாகிருஷ்ணன் காலமாகிவிட்டார். வழக்கில் இன்று 22.05.2025 திரு.கண்ணியப்பன், தனிநபருக்கு மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டணையும் மற்றும் ரூ.50,000/- விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.